ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ உந்திமேல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உந்திமேல் ॥

## திருவரங்கம் - 1

‡உந்திமேல் நான்முகனைப் படைத்தான்⋆ உலகுண்டவன்
எந்தை பெம்மான்⋆ இமையோர்கள் தாதைக்கு⋆ இடம் என்பரால்⋆
சந்தினோடு மணியும் கொழிக்கும்⋆ புனல் காவிரி⋆
அந்திபோலும் நிறத்தார் வயல் சூழ்⋆ தென் அரங்கமே (1)

வையம் உண்டால் இலை மேவும் மாயன்⋆ மணி நீள் முடிப்⋆
பை கொள் நாகத்தணையான்⋆ பயிலும் இடம் என்பரால்⋆
தையல் நல்லார் குழல் மாலையும்⋆ மற்றவர் தட முலை⋆
செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ்⋆ தென் அரங்கமே (2)

பண்டுஇவ் வையம் அளப்பான் சென்று⋆ மாவலி கையில் நீர்
கொண்ட⋆ ஆழித் தடக் கைக்⋆ குறளன் இடம் என்பரால்⋆
வண்டு பாடும் மது வார் புனல்⋆ வந்திழி காவிரி⋆
அண்ட நாறும் பொழில் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (3)

விளைத்த வெம் போர் விறல் வாள் அரக்கன்⋆ நகர் பாழ்பட⋆
வளைத்த வல் வில் தடக்கை அவனுக்கு⋆ இடம் என்பரால்⋆
துளைக் கை யானை மருப்பும் அகிலும்⋆ கொணர்ந்துந்தி⋆ முன்
திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (4)

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன்⋆ வான் புக⋆
அம்பு தன்னால் முனிந்த⋆ அழகன் இடம் என்பரால்⋆
உம்பர் கோனும் உலகேழும்⋆ வந்தீண்டி வணங்கும்⋆ நல்
செம் பொனாரும் மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (5)

கலை உடுத்த அகலல்குல்⋆ வன் பேய் மகள் தாய் என⋆
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன்⋆ வாழும் இடம் என்பரால்⋆
குலையெடுத்த கதலிப்⋆ பொழிலூடும் வந்துந்தி⋆ முன்
அலை எடுக்கும் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (6)

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும்⋆ சகடமும் காலினால்⋆
துஞ்ச வென்ற சுடர் ஆழியான்⋆ வாழும் இடம் என்பரால்⋆
மஞ்சு சேர் மாளிகை⋆ நீடகில் புகையும் மா மறையோர்⋆
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும்⋆ தென் அரங்கமே (7)

ஏன மீன் ஆமையோடு⋆ அரியும் சிறு குறளுமாய்⋆
தானுமாயத்⋆ தரணித் தலைவன் இடம் என்பரால்⋆
வானும் மண்ணும் நிறையப்⋆ புகுந்தீண்டி வணங்கும்⋆ நல்
தேனும் பாலும் கலந்தன்னவர் சேர்⋆ தென் அரங்கமே (8)

சேயன் என்றும் மிகப் பெரியன்⋆ நுண் நேர்மையின் ஆய⋆ இம்
மாயையாரும் அறியா⋆ வகையான் இடம் என்பரால்⋆
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து⋆ ஆர் புனல் காவிரி⋆
ஆய பொன் மா மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (9)

‡அல்லி மாதர் அமரும்⋆ திரு மார்வன் அரங்கத்தை⋆
கல்லின் மன்னு மதிள்⋆ மங்கையர் கோன் கலிகன்றி சொல்⋆
நல்லிசை மாலைகள்⋆ நால் இரண்டும் இரண்டும் உடன்⋆
வல்லவர் தாம் உலகாண்டு⋆ பின் வான் உலகாள்வரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖